# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 30

# ஜெபம்




Bible Research and Study Centre

## தேவனுடைய தெய்வீகத்திட்டம்

# ஜெபம்



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிடித்த தலைப்பாகிய ஜெபம் குறித்து ஆராய இருக்கிறோம்.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் எப்படி? எதற்காக? ஜெபிக்கவேண்டும் என்று புரிந்துகொள்வதில்லை. உலகில் உள்ள எல்லா மார்க்கத்தாரும் ஜெபிப்பதைக் காண்கிறோம். கிறிஸ்தவர்களில் பலதரப்பட்ட பிரிவினர் ஜெப ஆலயங்களில் ஜெபத்திற்கென்று அதிகநேரம் செலவிடுவதைப் பார்க்கிறோம்.




வேதத்திலுள்ள சத்தியங்களைக் குறித்து ஆராய்வதைக் காட்டிலும் ஜெபத்திற்கு இன்று அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று கருதுகின்றனர். இதனிமித்தமாக இன்றைக்கு- ஜெபக் கூட்டங்கள், உபவாச ஜெபக் கூட்டங்கள், முழு இரவு ஜெபங்கள்,என அநேகவிதமான ஜெபஆராதனைகளை நடத்துகின்றதைக் காண்கிறோம்.

**இப்படியிருக்க, உண்மையில் ஜெபம் என்பதன் அர்த்தம் என்ன?**

ஜெபம் என்பது தேவனுக்கு ஏறெடுக்கும் துதி, நன்றி, விண்ணப்பங்கள், வேண்டுதல்கள்ஆகியவற்றை விவரிக்க பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தையாகும்.

தேவனோடு தனியாகவும், நேரடியாகவும் தொடர்புகொள்ளுதலே ஜெபம். இப்பொழுது இதைக்குறித்து இதுவரை அறிந்திராத சில விஷயங்களைக் காண்போம்.

வேதாகமத்தின் பார்வையில் பார்க்கும்பொழுது, ஜெபம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வகுப்பாருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையாகும். இது ஆச்சரியமளித்தாலும்

நம் போதகர் கூறிய வார்த்தைகளிலிருந்து அறியலாம் -

**யோவான் 17:9**

"நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல் நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்"

இவ்வுலகத்தின் இரட்சகராக வந்தவர், இவ்வுலகத்துக்காக ஜெபிக்காததற்குக் காரணம் என்ன?

வேதத்தில் ஜெபத்தைக் குறித்த விசேஷமான காரியங்கள் இருப்பதே காரணம். முதலில் நாம் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த உறவை பார்க்கும்பொழுது -

**ஆதியாகமம் 4:14**

"இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர், நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து.."


மனுக்குலம் தேவனிடமிருந்து விலகியிருந்த நிலைமை இங்கு கூறப்பட்டுள்ளது. இந்த நிலைமையில், தங்களை சிருஷ்டித்தவரைப் பற்றின அறிவை இழந்தார்கள், மறந்துபோனார்கள்.

மீண்டுமாக தேவனுடைய இராஜ்யத்தில் தன் சிருஷ்டிகரைப் பற்றி புரிந்துகொள்ளும் கண்கள் திறக்கப்பட இருப்பதை -

**சங்கீதம் 22:27**

"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்.."

தேவனை மறந்த நிலைமையிலிருந்த மனுக்குலத்துக்கு, சில விதிவிலக்குகள் இருந்தன. ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு போன்றவர்கள் தேவனைப் பற்றி அறிந்தவர்களாயிருந்து, அவரோடு ஜெபத்தில் உறவாடினர்.




யாக்கோபு மரித்தவுடன் அவருடைய குமாரர்களிடத்தில் தேவன் கூறின வார்த்தைகளை கவனிப்போம் -

**ஆமோஸ் 3:2**

"..பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்.."

யாக்கோபுக்குப் பின்பு, ஒரு முழு தேசமாகிய இஸ்ரயேல் தேசத்தோடு உடன்படிக்கை செய்து, அதன்மூலம் அவர்களோடு தொடர்புகொண்டார் -

**யாத்திராகமம் 19:5**

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது"

மோசே மூலம் சீனாய் மலையில் இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டது நியாயப்பிரமாண உடன்படிக்கையே ஆகும். இதன் மூலம் உண்டான உறவின் அடிப்படையில், வருடந்தோறும் பாவநிவாரண பலிகள் மூலம் அவர்களது பாவங்கள் நிவர்த்திசெய்யப்பட்டது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட இஸ்ரயேல் தேசம், தேவனிடம் ஜெபத்தின்மூலம் சேர்ந்தனர்.

இந்த உடன்படிக்கையின் உறவு, யூத யுகம் என்றழைக்கப்பட்ட காலப்பகுதியில் யாக்கோபின் மரணத்தில் துவங்கி, நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகை வரை நீடித்தது.

ஆனால் வெகுசீக்கிரத்தில் யூதயுகம் முடிவுக்கு வந்ததை இயேசுவின் வார்த்தைகளில் வாசிக்கிறோம்-

**மத்தேயு 23:37-38**

"எருசலேமே எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக, நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்"

இந்த வார்த்தைகளை கிபி 33ல் இயேசு தாம் மரிக்குமுன்பாக பேசினார்.அதே வருடத்தில் பெந்தெகொஸ்தே நாளுக்கு 8-10 வாரங்களுக்குப் பின்பு, தேவனுடைய தெய்வீக திட்டத்தில் ஒரு புதிய யுகம் துவங்கியது.

இந்த புதிய யுகத்தில், தேவனை அறியவும், அவரோடு உறவாடவும் புதிய நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன.

**யோவான் 14: 6**

".. நானே வழியும்.. என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.."

இதுமுதற்கொண்டு, யூதர்கள் தங்கள் தேவனிடத்தில் கொண்டுள்ள உறவைத் தொடரவேண்டுமானால், இயேசுவை ஏற்றுக்கொண்டு, விசுவாசிக்கவேண்டும். இதுவரை அவர்கள் செய்துவந்தபடி தேவனை நேரடியாக தொடர்புகொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

யூதர்களில் பெரும்பாலானவர்கள் "வழியாகிய இயேசுவை" புறக்கணித்ததால், தேவனோடு அவர்கள் பெற்றிருந்த சிலாக்கியங்களையும் ஐக்கியத்தையும் இழந்தனர். இதை

**'ஐசுவரியவானும் ஏழை லாசருவும்"** உவமையில் நாம் வாசிக்கிற **'பிளவு"** அடையாளப்படுத்துகிறது.

**லூக்கா 16:26**

"எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது"

இருந்தபோதிலும், இயேசுவை விசுவாசித்த சிலர், 'கிறிஸ்தவர்களாகும்" விசேஷித்த ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்தனர்.

இந்த சிலாக்கியம், பின்னாளில், யூதரல்லாத புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது -

**அப்போஸ்தலர் 10:1-2.˙.45**

"இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரிய பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனைநோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்"

"..அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் , தேவனைப் புகழுகிறதையும்.."


இவ்விதமாக புறஜாதியாருள் முதலாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொர்நெலியுவும் அவரது குடும்பத்தாரும் இருந்தனர்.

இவ்வாறு விசுவாசிகளான அனைவரும் இயேசுவின்மூலம் தேவனிடத்தில் ஜெபிக்கும் உரிமை பெற்றிருக்கின்றனர்.

ஆனால் விசுவாசிகளாக இருக்கும் நிலை என்பது கிறிஸ்தவ ஜீவியத்தில் "ஆரம்ப நிலை" அதாவது **'அழைக்கப்பட்ட நிலைமை"** ஆகும். இவர்கள் ஆவிக்குரிய நிலைமையில் **'குழந்தைகள்(1பேது 2:2)"** ஆவர். இயேசுவை விசுவாசிக்கிற இவர்கள் , அவரைப் 'பின்பற்றுபவர்களாக" மாறவேண்டும்

**1பேதுரு 2:21**

"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்"



ஆனால் கிறிஸ்தவர்களில் வெகுசிலரே இதைப் புரிந்துள்ளனர். "அழைக்கப்பட்டவர் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலர்" **மத்தேயு 22:14**

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய இவர்களுக்கே ஜெபிக்கும் உரிமை இந்த சுவிசேஷயுகத்தில் அளிக்கப்படுகிறது. இதை பின்வரும் வசனத்தில் காணலாம் -

‘ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்”

இங்கு நாம் என்பது பின்பற்றுகிற வகுப்பாரைக் குறிக்கிறது. இவர்களுடைய ஜெபம் -

* **பாவங்கள் மன்னிக்கப்பட்டு இரக்கம் பெறுவதற்காகவும்,**
* **சோதனைகளில் நிலைநிற்பதற்கான ஆவிக்குரிய பெலத்திற்காகவும்** ஏறெடுக்கப்படுகிறது.

இடுக்கமான வழியில் அனுதினமும் முன்னேறுவதற்கு ஜெபம் மிக அவசியமானது. முன்பு சீஷர்களுக்கு எழுந்த கேள்வியே இன்று அநேக கிறிஸ்தவர்களுக்கும் எழுகிறது -

**லூக்கா 11:1**

‘அவருடைய சீஷரில் ஒருவன் அவரைநோக்கி - ஆண்டவரே.. எங்களுக்கு ஜெபம்பண்ணப் போதிக்கவேண்டும்”

இதற்கு பதிலாக நம் கர்த்தர், நாம் ஜெபிக்கவேண்டிய விதம் குறித்து கூறினார் -

**மத்தேயு 6:9**

‘நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது..”

இதுவே ஜெபம் செய்யும் விதம். ஒவ்வொருமுறையும் சொன்னதையே திரும்பத்திரும்ப ஒப்புவிக்கும் ஜெபமாக இல்லாமல், இது ஜெபத்தின் மாதிரியாக இருக்கிறது.

இப்பொழுது நம் கர்த்தரிடத்திலிருந்து ஜெபிக்கவேண்டிய முறை குறித்து கற்றுக்கொள்ளலாம்.

## பகுதி 1

### மத்தேயு 6:9 ‘பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே..”

எல்லா வேண்டுதல்களும் எல்லோருக்கும் தேவனாகிய பிதாவினிடத்தில் ஏறெடுக்கப்படவேண்டும். பிதாவைக் குறித்து இயேசு கூறுகையில்,

**யோவான் 17:3** ‘ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும ’

பவுல் அப்போஸ்தலனும் **1கொரிந்தியர் 8:6** ‘பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு”.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த மாபெரும் சத்தியத்துக்கு குருடாக்கப்பட்டவர்களாக தங்களுடைய ஜெபங்களை இயேசுவினிடத்தில் ஏறெடுக்கின்றனர். இப்படி அவர்கள் செய்யக் காரணம் இயேசுவையே பிதா என்று நினைப்பதனாலாகும். பிதாவை அறிவதும் அவரை அப்பா என்றழைப்பதும் மிகப்பெரிய சிலாக்கியமாகும். இது யூதர்கள் பெற்றிராத புத்திர சுவீகாரத்தின் சிலாக்கியமாக இருந்து, கீழ்க்காணும் வசனத்தில் குறிப்பிடப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டதாகும் -

**யோவான் 1:12**

“..தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்”

ஆம் அப்போஸ்தலனாகிய யோவான் இதைக் குறித்து எழுதும்போது,

**யோவான் 3:1**

'நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.."

## பகுதி 2

### மத்தேயு 6: 9 ' உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக"

சர்வ சிருஷ்டிகளின் தேவனாகிய பிதாவை அழைத்தபிறகு, நாம் அவரை துதித்து, கனப்படுத்தி, மகிமைப்படுத்தவேண்டும்.

தேவனை துதிப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவருடைய பரிபூரணமான குணநலன்கள், கற்பனைக்கு எட்டாத அவருடைய மகிமை ஆகியவைகளாகும்.
பிதாவை நோக்கி ஏறெடுக்கும் துதிகளுக்கான சில உதாரணங்களை காணலாம் -

**ஏசாயா 57:15**

"நித்தியவாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர்.."

**எபேசியர் 1:7**

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர்"

**சங்கீதம் 145:2,3**

"நாடோறும் உம்மை ஸ்தோத்தரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது"

**நெகேமியா9:6**

"நீர் ஒருவரே கர்த்தர், நீர் வானங்களையும் வானாதி வானங்களையும் , அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர். அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர், வானசேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது"

பிதாவாகிய தேவனை துதியினாலும் கனத்தினாலும் மகிமைப்படுத்தினபின்பு, அடுத்து ஜெபத்தில் ஏறெடுக்கப்படவேண்டியது என்ன?

## பகுதி 3

### மத்தேயு 6:10 'உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக"

நம் இருதயத்தில் தோன்றவேண்டிய சிந்தை - தேவனுடைய வார்த்தையில் மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் மகிமை நிறைந்த தெய்வீகத் திட்டம் மற்றும் இராஜ்யத்தைப் பற்றின சுவிசேஷமாகும்.

தேவனுடைய இராஜ்யத்தின் கண்ணுக்குத்தெரியாத ஆவிக்குரிய பாகத்தில் , வளர்ந்துவரும் சபைக்காக ஜெபிப்பது.. இந்த சபையில் உள்ள அனைத்து அங்கத்தினர்களுக்காகவும்.. அறுவடையின் வேலைகளுக்காகவும் ஜெபிப்பது.

இயேசுவின் இரண்டாம் வருகையில் இந்த பூமியின்மீது அந்த இராஜ்யம் உண்மையாக ஸ்தாபிக்கப்படுவதே, இப்பூமியில் அவரது சித்தம் செய்யப்படுவதாகும்.

அடுத்து ஜெபத்தின் நான்காவது பாகத்துக்கு வருவோம்.

## பகுதி 4

**மத்தேயு 6:11 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"**

அநேகர் இந்த வார்த்தைகளைத் தவறாகப் புரிந்துகொண்டு, அனுதின ஆகாரத்திற்கும், ஜீவியத்தின் எல்லாத் தேவைகளுக்குமான வேண்டுதல் என்று நினைக்கின்றனர். ஆனால் நம் போதகரது கட்டளையை நாம் கவனிக்கையில் -



**மத்தேயு 6: 8**

"அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"

நம்முடைய மாம்சத்துக்குரிய தேவைகளான உணவு உடை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை தேவன் தருவார் என்ற பூரண நம்பிக்கை வேண்டும். ஏனெனில் இது குறித்து எழுதப்பட்டுள்ளதை வாசிக்கையில்,

**எபிரேயர் 13:5**

"நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே"

**ஏசாயா 33:16**

"..அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும், அவன் தண்ணீர் அவனுக்கு

நிச்சயமாய்க் கிடைக்கும்"

இப்படியிருக்க, இங்கு குறிப்பிடப்படும் **'அனுதின உணவு"** எதைக் குறிக்கிறது? இது ஆவிக்குரிய உணவாகிய **'தேவனுடைய வார்த்தைகள்**" என்று நாம் வாசிக்கிறோம் -

எரேமியா 15:16

'உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்"

ஜீவனுக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தேவையான தேவனுடைய வார்த்தைகளிலிருந்து பெறப்படும் வழிநடத்துதல், அனுதினமும் சபைக்கு தேவைப்படுகிறது.

தேவனுடைய பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த அனுதின உணவுவேண்டுமென்று அனுதினமும் பிதாவிடம் ஜெபிக்கவேண்டும்.

இங்கு 'எங்களுக்குத் தாரும்" என்ற வார்த்தைகள், நம்முடைய ஜெபம் கிறிஸ்துவின் முழு சரீரமாகிய குடும்பத்தாரின் நலனுக்காக இருக்கவேண்டுமே தவிர, நமக்காக மாத்திரம் ஏறெடுக்கப்படக்கூடாது என்பதைக் காட்டுகிறது.

இப்பொழுது ஜெபத்தைக் குறித்த ஐந்தாம் பாகத்திற்கு வருவோம் -

# பகுதி 5

## மத்தேயு 6:12 'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"

இங்கு கடன்கள் என்பது நம்முடைய பாவங்களைக் குறிக்கிறது. இயேசுவின் பலியை விசுவாசிப்பதன்மூலம் நாம் முந்தைய நடக்கையின் பாவங்களிலிருந்து விடுபட்டு நீதிமானாகிறோம். ஆனால் நீதிமானாக்கப்படுதலை அடைந்தபிறகு, நாம் செய்யும் பாவங்கள் எப்படி கழுவப்படும்?

1யோவான் 1:9

'நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால் , பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"

நாம் செய்த பாவத்தை அறிக்கையிடுவதன் மூலம் நம் கடன்களாகிய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஆனாலும் பின்வரும் தேவனுடைய வார்த்தைகளை நினைவில் கொள்வது அவசியம் -

மத்தேயு 6:14,15

'மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்"

நமக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களை நாம் மன்னிப்பதே, நம் பாவங்களை தேவன் மன்னிப்பதற்கான நிபந்தனையாகும்.

இப்பொழுது ஜெபத்தைக் குறித்த ஆறாவது பாகத்திற்கு வருவோம் -

# பகுதி 6

## மத்தேயு 6:13 'எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்"

இந்த வசனத்தில் இரண்டு கருத்துக்கள் உள்ளது.
**'எங்களை சோதனையில் உட்பிரவேசிக்கப்பண்ணாமல்"** - ஒரு கிறிஸ்தவன் இடுக்கமான வழியில் நடக்கும்போது, விசுவாசத்தை நிரூபிப்பதற்கும், குணலட்சணங்களில் வளர்ச்சியடையவும் 'சோதனைகள்" தேவனால் அனுமதிக்கப்படும். இவ்வாறு சோதனைகள் அனுமதிக்கப்படும்போது மிகப்பெரிய சந்தோஷமும், ஆசீர்வாதமும் உண்டாகும், ஜீவகிரீடத்தையும் பெறமுடியும் -

**யாக்கோபு1:2,3,12**

'என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.. சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்"

இப்பகுதியை சரியாக மொழிபெயர்க்கவேண்டுமானால், **'சோதனையில் கைவிட்டுவிடாமல்"** என்று சரியாக மொழிபெயர்க்கலாம். சோதனை ஏற்படும்வேளையில், தேவனது **'சகாயஞ்செய்யும் கிருபையை"** வேண்டுவதைக் குறிக்கிறது(**எபிரேயர் 4:16**).

சோதனைகளை எடுத்துப்போடுவதற்காக இங்கு ஜெபிக்காமல், அந்த சோதனைகளைத் தாங்குவதற்கும், மேற்கொள்வதற்கும் தேவையான பெலத்தை வேண்டி ஜெபிக்கிறோம்.

இப்பொழுது இவ்வசனத்தின் இரண்டாம் பகுதியை தியானிப்போம் -

### "..தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.."


இது நமக்குள் இருக்கும் மாம்ச பெலவீனங்களாகிய தீமையை, தனக்கு சாதகமாகப் பயன்படுத்தக் காத்திருக்கும் சாத்தானை எதிர்த்துப் போராடவும், அதிலிருந்து கர்த்தர் விடுவித்து ஜெயமளிக்கவும் வேண்டி ஜெபிப்பதாகும்.

**மத்தேயு 26:41**

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்"

இங்கும்கூட “எங்களை” எனும் வார்த்தை, நமக்காக மட்டும் நம் ஜெபங்களை ஏறெடுக்காமல், ஒரே விதமான சூழ்நிலையின் மத்தியில் ஜீவிக்கும் **‘கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய நம் சகோதரர்கள் அனைவருக்காகவும்** “ஏறெடுக்கப்படவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

இப்பொழுது ஜெபம் பற்றின பாடத்தின் முடிவுக்கு வருவோம்.



கொலோசெயர் 3:17

“வார்த்தைகளினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து..”

ஒவ்வொரு ஜெபத்தின் முடிவிலும் , நம் ஜெபங்கள் பிதாவிடம் சேரும் உரிமையைப் பெற்றுத்தந்த கர்த்தராகிய இயேசுவை நினைவுகூர்வது ஆகும்.

யோவான் 16:23,24

“மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்”

குமாரன் மூலமாக மாத்திரமே பிதாவினிடத்தில் சேரமுடியும். நம் கர்த்தரே இது குறித்து கூறின வார்த்தைகளை ஒருபோதும் மறக்கக்கூடாது -

**யோவான் 15:5**

“என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது”

ஆகவே நாம் ஜெபத்தை பிதாவை நோக்கி ஏறெடுப்பதும், ஜெபத்தை நிறைவுசெய்யும்போது ‘தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராகிய” குமாரன்மூலமாக ஜெபம் கேளும் என்று முடிப்பதும் பொருத்தமாக இருக்கும்.

முடிவாக நாம் அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய சபைக்கு எழுதின நிருபத்திற்கு செல்வோம் -

**1தெசலோனிக்கேயர் 5:17**

“..இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்..”

இரவுபகலாக முழுநேரமும் ஜெபித்து, மற்ற கடமைகளை தவிர்க்கவேண்டும் என்று இதற்கு பொருள்கொள்ளக்கூடாது. ஏனென்றால் நம் குடும்பத்தில் நமக்கு கடமைகள் உண்டு என்பதை

**1தீமோத்தேயு 5: 8**

‘ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்”


ஆகவே இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று இங்கு போதிக்கப்படுவதன் கருத்து என்னவெனில், கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய வழிநடத்துதலை எதிர்பார்த்து எப்பொழுதும் ஜெபசிந்தையுடையவராக இருக்கவேண்டும் என்பதே.

இதற்கு முன்னுதாரணமாக நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இருந்ததை வசனத்தில் வாசிக்கலாம்

**எபிரேயர் 5: 7**

“அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, நமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு..”

இதுவே நாம் பின்பற்ற வேண்டிய உன்னதமான உதாரணம்.
அன்பான சகோதர சகோதரிகளே, நாம் ஜெபம் பண்ணவேண்டிய விதத்தை நம் கர்த்தரிடத்திலிருந்தும் அவர் நமக்குக் கற்பித்த மாதிரி ஜெபத்திலிருந்தும் கற்றுக்கொண்டோம்.




**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருந்து,**
**அவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்படி வழிநடத்துவதாக, ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/